முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் – 15/2016

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 காளியம்மாள் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>

1) எனது கணவர் பெயர் முனியப்பன். எனது மகன்கள் பெயர் மலையாளன், சண்முக சுந்தரம். மலையாளனுக்கு திருமணமாகி 3 குழந்தைகள் உள்ளனர். அவர் 2016ல் இறந்துவிட்டார். எனது பேரக்குழந்தைகள் பெயர் பிரபாகரன், சரவணன், சண்முக பிரியா ஆகும். எனது மருமகள் பெயர் பூவாயி. மேற்படி நபர்கள் அனைவரும் தரகம்பட்டியில் வசிக்கிறார்கள். எனது மகள் பெயர் அஞ்சலம். எனது மகன் சண்முக சுந்தரத்திற்கு திருமணம் ஆகவில்லை. 3ம் பிரதிவாதி சொர்ணம் எனது சின்னம்மா மகன் என்றால் சரிதான். சொர்ணத்திற்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் தங்கம்மாள், அஞ்சலம். சொர்ணம், தங்கம்மாள் இருவருக்கும் ரமேஷ் என்ற மகன் இருக்கிறார் என்றால் சரிதான்.

2) ரமேஷ் என்னிடம் சுமூக உறவில் இருக்கிறாரா என்றால் அவரது தகப்பனார் சொர்ணம் இறந்ததில் இருந்து எங்களிடம் பேசுவதில்லை. அதற்கு முன்பில் சுமூக உறவில் இருந்தோம் என்றால் சரிதான். சொர்ணம், அஞ்சலம் இருவருக்கும் ராஜா, வடிவேல் என்ற இரண்டு மகன்கள் என்றால் சரிதான். ராஜா, வடிவேல் இருவரும் வரகூரில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். ரமேசும் வரகூரில்தான் வசிக்கிறார். பஞ்சம்பட்டியில் பூக்கடை வைத்துள்ளார். சொர்ணத்தின் மனைவி அஞ்சலம் வேறு, எனது மகள் அஞ்சலம் வேறு என்றால் சரிதான். எனது சகோதரி 2ம் பிரதிவாதி தங்கம்மாள் வேறு, சொர்ணத்தின் முதல் மனைவி தங்கம்மாள் வேறு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறத்தில் 4ம் பிரதிவாதி மற்றும் அவரது பங்காளிகள் வீடு உள்ளது என்றால் சரிதான்.

3) 4ம் பிரதிவாதியின் வீடு கெட்டி மெத்தை வீடு என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி வீட்டில் இருந்து ½ பர்லாங் துாரத்தில் தென்கிழக்காக எனது கணவர் பெயரில் ஒரு நிலம் உள்ளது என்றால், கிழக்கில் உள்ளது. அந்த நிலத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது, எனது நிலம் காலியாக உள்ளது. அந்த நிலத்தில் ஒரு வீடு எனது கணவர் பெயரில் உள்ளது என்றால், எனது மாமனார் பெயரில் உள்ளது. தரகம்பட்டி – பாலவிடுதிக்கு செல்லும் தார்சாலைக்கு மேற்கே சண்முகம் கடைக்கும் மூக்கையா கடைக்கும் இடையில் பொதுப்பாதை செல்கிறது என்றால் சரிதான். மூக்கையா மேற்படி பாதை சம்பந்தமாக எனக்கு எதிராக ஓர் வழக்கு தாக்கல் செய்தார் என்றால், எனது சித்தப்பா அந்த வழக்கிற்கு சென்றார், அது மூக்கையாவிற்கு ஆதரவாக தீர்ப்பானது. மேற்படி பாதைக்கு வடபுறம்தான் மூக்கையா கடை உள்ளது என்றால் சரிதான். மூக்கையாவிற்கும், எனக்கும் இடையே சுமூக உறவு உள்ளது என்றால் சரிதான்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**